# அரையாண்டு பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 90

### பகுதி - 1

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 x 1 = 14

1. பாயிரம் இல்லது _______ அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

2. தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை = உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு = மெய் + உயிர்
இ) கடல் + அலை = உயிர் + மெய் ஈ) மண் + வளம் = மெய் + மெய்

3. உலக சிட்டுக்குருவிகள் நாள்
அ) சனவரி 10 ஆ) பிப்ரவரி 20 இ) மார்ச் 20 ஈ) ஏப்ரல் 20

4. VALUE EDUCATION - என்பதன் கலைச்சொல்
அ) குழுக்கல்வி ஆ) ஆற்றல் கல்வி இ) மதிப்புக் கல்வி ஈ) முது கல்வி

5. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல்
அ) மரை அ) திரை இ) வரை ஈ) கரை

6. "கல்வி அழகே அழகு" - என்ற அடிகள் பயின்று வரும் நூல்?
அ) நாலடியார் ஆ) சிறுபஞ்சமூலம் இ) ஆத்திச்சூடி ஈ) திருமந்திரம்

7. "திருநங்கை" என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்
அ) பிரித்திகா யாஷினி ஆ) நர்த்தகி நடராஜ்
இ) ஜோயிதா மெண்டல் ஈ) தாரிகா பானு

8. துன்பப் படுபவர் _______.
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) நாவைக் காக்காதவர் ஈ) பொருளைக் காக்காதவர்

9. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி, சந்தி ஆ) பகுதி, விகுதி, இடைநிலை
இ) பகுதி, விகுதி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

10. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று _______.
அ) சிற்றில் ஆ) சிறுதேர் இ) சாழல் ஈ) சிறுபறை

11. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?
அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

12. சாந்திநிகேதனத்தில் உள்ள மரம்
அ) சமேலி ஆ) ஜூதீ இ) பியால ஈ) ஸேவுந்தி

13. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி அ) மேலாளர் இ) நெசவாளி ஈ) ஆசிரியர்

14. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?
அ) வாய்க்கால் அ) நாங்கூழ் இ) நடராசன் ஈ) புல்

### பகுதி - 2

#### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?

17. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18. படைக்கு பாதுகாப்பாக இருப்பவை எவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?
20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
21. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
23. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க ?: வைகை
24. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக : அ) மலிந்து ஆ) அணிந்தேன்
25. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக : அ) சிறுகோல் ஆ) பயமில்லை
26. ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக : அ) கடிநகர் அ) விரிகதிர்
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்
28. விடைக்கேற்ற வினாவாய் மாற்றுக.
திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்.
29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளை தருக: அ) # ஆ) ^
30. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக : பொறி, பொரி

பகுதி - 3

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க : 2 x 4 = 8

31. "உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக
32. வாய்க்காலின் சிறப்புகளாக குறிப்பிடப்படுவன யாவை?
33. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
34. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2 x 4 = 8

35. 'என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' - என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?
37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?
38. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? எனும் நும் கருத்தை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3 x 4 = 12

39. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(அல்லது)

பிறிதுமொழிதல் அணியை விளக்குக.

40. தமிழாக்கம் தருக :
அ) The pen is mightier than sword.
ஆ) Winners don't do different things, they do things differently.
இ) A picture is worth thousand words.
ஈ) Work while you work and play while you play.

www.Padasalai.Net www.CBSEtips.in



40. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தமிழ் என்ற சொல் தமிழர்க்கு 'இனிமையானது, இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியிலும் தமிழ் எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்"என்னும் இடத்து, "தமிழ்" என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் "தமிழ்" பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே" மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

வினாக்கள் :

1. தமிழ் என்னும் சொல்லுகுரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

41. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்தினை எழுதி ஏற்புடைய நயங்களை மூன்றினை எழுதுக)

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம் தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம் தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம் தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும். - நாமக்கல் கவிஞர்

42. மழை அல்லது அன்னை ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை எழுதுக.

43. சிறு பாடாண்திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

(பின்வரும் வினாக்களுக்குப் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக)

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க. (அல்லது)

அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. (அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? (அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

அடி மாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

47. அ) "சிற்றூரும்" எனத் தொடங்கும் புரட்சிக்கவி எனும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "நன்று" என முடியும் குறட்பாவை எழுதுக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com